# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2449/73 - 2025 අගෝස්තු මස 16 වැනි සෙනසුරාදා - 2025.08.16

2449/73 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலன்தொட பிரதேச செயலகப் பிரிவில் மாகம் பத்துவ சிறு பிரிவில் இலக்கம் 129, ரிதியகம கிராம அலுவலர் பிரிவில் ரிதியகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் நிலப்பரப்பு வரைபட இலக்கம் 830255 இன் வலய இலக்கம் 02 இல் பத்திர இலக்கம் 01 எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 0.4481 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. துண்டு இல. 03

காணியின் பெயர்: கொக்கல கலே; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான 06 கட்டிடங்கள், 03 நீர்த் தாங்கிகள், ஒரு நீர்த்தாங்கி கோபுரம், நீர் காற்றோட்டக் கருவி மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கை ஒன்று; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அம்பலன்தொட்ட பிரதேச சபை; யாப்பு ரீதியான ஏற்பாடுகள் மற்றும் அளவிடுவதற்கான காரணம்: தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தேவையாகவுள்ளது; விஸ்தீரணம்: 0.4396 ஹெக்டயார்.

02. துண்டு இல. 04

காணியின் பெயர்: கொக்கல கலே; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் ஒரு பகுதி மற்றும் நீர்த்தாங்கி கோபுரத்தின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: அம்பலன்தொட்ட பிரதேச சபை; யாப்பு ரீதியான ஏற்பாடுகள் மற்றும் அளவிடுவதற்கான காரணம்: நீர்ப்பாசன திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தேவையாக வுள்ளது; விஸ்தீரணம்: 0.0085 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அம்பலன்தொட்ட பிரதேச செயலாளர் அலுவல கத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சின்தா பீ. டப்ளியூ. வன்னிஆரச்சி,
பிரதேச செயலாளர்,
அம்பலன்தொட்ட.

பிரதேச செயலகம்,
அம்பலன்தொட்ட,
2025, ஓகத்து 13.

EOG 08 - 0184